செ. கு. எண்: 093 நாள் : 28.05.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.5.2014

சென்னை பெருநகர காவல், திருவேற்காடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.ரவிச்சந்திரன் அவர்கள் 26.5.2014 அன்று பூந்தமல்லி நெடுஞ்சாலை, வேலப்பன்சாவடி அருகில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது அதிவேகமாக வந்த கண்டெய்னர் லாரி மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த காவல் துறை உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த காவல் துறை உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**